துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்! மணிமாறன் தென்றல் தலைமை! ஆ.இராசா எம்.பி.- அமைச்சர்கள் சிறப்புரை!

பொள்ளாச்சியில் மாபெரும் மோட்டார் சைக்கிள் போட்டி! அமைச்சர்கள் சு.முத்துசாமி - செந்தில்பாலாஜி வாழ்த்துரை!

தளபதி முருகேசன் · கே.ஈஸ்வரசாமி எம்.பி. · கே.இ.பிரகாஷ் எம்.பி. பங்கேற்பு! பரிசுகளை தென்றல் செல்வராஜ் · டாக்டர் ஆர்.மகேந்திரன் வழங்குகின்றனர்!

பொள்ளாச்சி, அக்.5- கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தென்னிந்திய அளவிலான மாபெரும் மோட்டார் சைக்கிள் பந்தயம் நாளை(6.10.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு பொள்ளாச்சி ரைட் கொங்கு சிட்டி மைதானம் ஆச்சிபட்டியில் நடைபெறுகின்றது.

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக அமைச்சர்கள் சு.முத்துசாமி, செந்தில்பாலாஜி ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மாவட்ட இளைஞர் அணிதுணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கிறார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ். சபரி கார்த்திகேயன் வரவேற்றுப் பேசுகிறார்.

வே. மருதவேல், கோ. பாலகிருஷ்ணன், முத்துச்சாமி, எஸ்.கௌதமன், பி.ஏ. செந்தில்குமார், மா.திருமலைராஜா, சல்மான்கான் நாசர், உதய பூபதி, ச.புவனேஷ், சபரி கிருஷ்ணன், வி.ஆர். நிஷாந்த், கி.சுரேஷ்குமார், ந.சத்தியதேவ், ராஜூ, தனம் தங்கதுரை, என்.பார்த்தசாரதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழகக் கொடி ஏற்றி போட்டியை மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், கே.ஈஸ்வர சாமி எம்.பி ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, அமைச்சர்கள் அர.சக்கரபாணி, மு.பெ. சாமிநாதன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எஸ்.எஸ்.சிவசங்கர், கயல் விழி செல்வராஜ், மற்றும் கே.இ.பிரகாஷ் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

பரிசுகளை கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பனர் தென்றல் செல்வராஜ், தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் டாக்டர் ஆர். மகேந்திரன் வழங்குகின்றனர்.

இவ்விழாவில் முன்னாள் அமைச்சர்கள் மு.கண்ணப்பன், பொங்கலூர் நா.பழனிச்சாமி மற்றும் நா.கார்த்திக், அ. ரவி, கு.சண்முக சுந்தரம், ப.ராஜ்குமார், கே.எம். தண்டபாணி, ந.கௌதமன், இரா. தமிழ்மணி, ஜி.ஏ. அதிபதி, கி.வரதராஜ், கே.எம்.நாகராஜ், சேனாதிபதி, வே.ஆறுச்சாமிட சி.ஆர். இராமச்சந்திரன், உமாபதி, சித்திக், தினகரன், ப.வைந்தமிழ்பாரி, மீனா ஜெயக்குமார், டாக்டர் கோகுல் கிருபாசங்கர், நா. தமிழ்ச்செல்வன், நா.முருகவேல், வி.ஜி. கோகுல், அருண்குமார், மாலதி நாகராஜ், சண்முகம், வி.பி.சந்திரசேகர், ஆ.சந்திரன், மு.க. முத்து, எம்.அமுதபாரதி, எம். ராஜேந்திரன், ந.கணேசன், கே.வி.சுப்பிர மணியன், ப.க.சாமிநாதன், சி. பொன்னுசாமி, செ.கனிமொழி, ஜெயபிரகாஷ், குறிச்சி பிரபாகரன், ரகுதுரைராஜ், எம் சக்திவேல், கோ.கதில்வேல், செ.நடராஜ், ரா. மாணிக்கம், எஸ்.ஜெயக்குமார், சாந்தாமணி வேலுச்சாமி, ஏ.ஆர்.வி. சாந்தலிங்ககுமார், ஜெ.மஞ்சு சௌமியா, நாகராஜசோழன், சுரேஷ், ரா.ராதாமணி உள்பட நகர, ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், நகராட்சி பேரூராட்சித் தலைவர்கள், கோவை தெற்கு மாவட்ட சார்பி அணி அமைப்பாளர்கள், பொள்ளாச்சி நகர கழக வடக்கு கிழக்கு நிர்வாகிகள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் உள்பட கழக முன்னணித் தோழர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர். பொள்ளாட்சி நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் பைக் பாபு நன்றி கூறுகிறார்.

தி.மு.க. விவசாய அணி

பெரம்பலூர் மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

பெரம்பலூர் மாவட்ட விவசாய அணியின் துணை அமைப்பாளர்களாக ஏற்கனவே நியமிக்கப்பட்ட தியாகராஜன் மற்றும் ராஜகோபால் ஆகியோர் மறைவெய்தியதால் மூ. அன்பரசன், (107, வடக்கு தெரு, கள்ளப்பட்டி, கடம்பூர் அஞ்சல், வேப்பந்தட்டை தாலுகா, பெரம்பலூர் மாவட்டம்), சா. செல்வக்குமார், (2/133-1, பெருமாள் கோவில் தெரு, அன்னமங்கலம் அஞ்சல், வேப்பந்தட்டை தாலுகா, பெரம்பலூர் மாவட்டம்) ஆகியோர் பெரம்பலூர் மாவட்ட விவசாய அணியின் துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பெரம்பலூர் மாவட்ட விவசாய அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03-10-2024.

ஏ.கே.எஸ்.விஜயன்
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி

தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

ஈரோடு வடக்கு மாவட்டம், ஒன்றியக் கழகப் பொருளாளர் மற்றும் மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், ஈரோடு வடக்கு மாவட்டம், சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட ச.பொன்மேன் நம்பியூர் ஒன்றிய பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.எ.பொன்னுச்சாமி மற்றும் பவானி வடக்கு ஒன்றியத்தின் மாவட்ட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.பி.பாலு ஆகியோர் மறைவெய்திய காரணத்தால்; ஈரோடு வடக்கு மாவட்டம், சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியப் பொருளாளர் நம்பியூர் ஒன்றிய பொருளாளர் மற்றும் பவானி வடக்கு ஒன்றியம் மாவட்ட பிரதிநிதி ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.1000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்." என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

ஈரோடு வடக்கு மாவட்டம், சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியப் பொருளாளர் பொறுப்புக்கு கே.செல்வன் அவர்கள் - நம்பியூர் ஒன்றிய பொருளாளர் பொறுப்புக்கு என்.பி.மணியன் அவர்கள் - பவானி வடக்கு ஒன்றியம், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கு என்.தங்கராஜ் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

ஈரோடு வடக்கு மாவட்டம்,
சத்தியமங்கலம் வடக்கு ஒன்றிய பொருளாளராக

திரு. கே.செல்வன், புளியமரத் தொட்டி, குன்றி, கடம்பூர் அஞ்சல், தா.க.புதூர் (வழி), ஈரோடு வடக்கு மாவட்டம் - 638 503. அவர்களும்,

நம்பியூர் ஒன்றிய பொருளாளராக

திரு. என்.பி.மணியன், 3/138, பாப்பான் தோட்டம், நாகரனை, சுண்டக்கம்பாளையம் அஞ்சல், நம்பியூர் தாலுகா, ஈரோடு வடக்கு மாவட்டம். அவர்களும்,

பவானி வடக்கு ஒன்றியம், மாவட்ட பிரதிநிதியாக

திரு. என். தங்கராஜ், 259, காட்டூர், மயிலம்பாடி அஞ்சல், பவானி வட்டம், ஈரோடு வடக்கு மாவட்டம்.

அவர்களும், தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 03-10-2024.

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

து.ப. அழகமுத்து
அக்டோபர் 5 (1987)

பழம்பெரும் சுயமரியாதை இயக்க செயல்வீரரும் – திருச்சி மாவட்டத்தில் கழகத்தை கட்டி வளர்த்த ஆரம்பகால தலைவர்களில் ஒருவர்.

1962ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் – தி.மு.கழக அரசில் அரசு கொறடாவாகவும் பணியாற்றியவர்.

1952 முதல் 1955 வரை ஊராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்.

1955ல் கருப்புக் கொடி போராட்டத்தில் கலந்து கொண்டவர். 1964ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

கழக நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த சென்னை மேற்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆர்.என். துரையின் தாயார் திருமதி ஆர்.கண்ணம்மாள் அவர்கள் மறைவெய்தினார். செய்தியறிந்து, கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் இல்லத்துக்குச் சென்று மறைந்த அன்னாரின் உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தாயாரை இழந்து வாடும் ஆர்.என்.துரை மற்றும் அவர்களுடைய குடும்பத்தார், நண்பர்களுக்கு ஆறுதலையும், இரங்கலையும் தெரிவித்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் புதிய பாய்ச்சலை ஏற்படுத்துவார்!

கழக மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, அக்.5- "துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சியில் புதிய பாய்ச்சலை ஏற்படுத்துவார்" என்று கழக மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது குறித்து கழக மீனவரணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை வருமாறு:

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல் என்று கூறுகிறார் வள்ளுவர். அதற்கேற்ப இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலினை துணை முதலமைச்சராக்கியிருக்கிறார் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

2019 ஜூலை 4 தேதி இளைஞரணி செயலாளராக உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்றதில் இருந்து, அணியின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள், இதர அணிகளும் வியப்படையும் வகையில் இருந்து வருகின்றன. இளைஞர்களுக்கு அரசியல் கற்றுக்கொடுத்து கழகத்தை வலுப்படுத்துவதற்காக நிர்வாகிகளை தொடர்ச்சியாக சந்தித்து ஆலோசனை நடத்தி வருகிறார்.

தி.மு.க.வை வலுப்படுத்த வேண்டும் என்ற தலைவரின் உத்தரவிற்கிணங்க, இதுவரை 25 லட்சத்திற்கும் மேற்பட்ட புதிய இளைஞர்களை கழகத்தில் சேர்த்திருக்கிறார். இவைகளை வெறும் எண்ணிக்கையாகக் கணக்குக் காட்டாமல் எண்ணங்களின் சேர்க்கையாக மாற்றும் வகையில் திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை ஏற்பாடு செய்து வருகிறார்.

அனல் பறக்கும் பிரச்சாரம்!

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு டு மற்றும் புதுச்சேரியில் 40 தொகுதிகளில் 10 ஆயிரம் கிலோ மீட்டருக்கு மேல் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அனல் பறக்கும் பிரச்சாரத்தை மேற்கொண்டார் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின். வழக்கமான மேடைப் பேச்சு மாதிரி அல்லாமல், யதார்த்தமாக மக்களுடைய மொழியிலேயே கலந்துரையாடினார். எய்ம்ஸ் மருத்துவமனைக்காக நடப்பட்ட ஒரு செங்கலை வைத்து தமிழ்நாட்டை புறக்கணிக்கும் பா.ஜ.க. அரசை பட்டிதொட்டியெல்லாம் அம்பலப்படுத்தினார். 29 பைசா பதாகையை தூக்கிப் பிடித்து, பா.ஜ.க. அரசு நிதி கொடுக்காமல் தமிழ்நாட்டை சுரண்டுவதை மக்களுக்கு புரியவைத்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், நான் முதல்வன் உள்ளிட்ட திராவிட மாடல் அரசின் முத்தான திட்டங்களையும் பிரச்சார களத்தில் உதயநிதி ஸ்டாலின் எடுத்துரைத்த விதம், கோடிக்கணக்கான மக்களிடையே எளிதில் சென்றடைந்தது. இதனாலேயே அவருடைய பிரச்சார களத்திற்கு மக்கள் கூட்டம் கூட்டமாக ஆர்வத்துடன் வந்தனர்.

உதயநிதி ஸ்டாலினின் தனித்துவமான பிரச்சார யுக்தி, அரசியல்வாதிகளையும், ஊடகங்களையும் உற்று நோக்க வைத்தது. தி.மு.க.வை அடுத்த கட்டத்திற்கு கொண்டும் செல்லும் பிரச்சாரம் என விவாதமாக்கப்பட்டன. ஊடகங்களில் இதேபோன்று ஆட்சிப் பணியின் மூலமாகவும் கவனத்தை ஈர்க்கத் தவறவில்லை உதயநிதி ஸ்டாலின் விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றதினால் தமிழ்நாட்டில் விளை யாட்டுத்துறை புத்துயிர் பெற்றிருக்கிறது. முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள், திருவிழா போன்று கோலாகலமாக நடத்தப்படுகின்றன.

மக்களுக்கான அரசியல்!

அமைச்சராக உதயநிதி ஸ்டாலினின் முயற்சியினால் தென் மாநிலங்களிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் மகளிரின் பங்களிப்பு அதிகம் என்பது மகத்தான சாதனை. ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதிக்கும் விளையாட்டு மைதானம், விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை என விளையாட்டுத்துறையில் மேற்கொள்ளப்படும் சீரிய நடவடிக்கைகளினால், இளைஞர்கள் விளையாட்டில் அதிக அளவில் ஆர்வம் காட்டுவதை ஊடகங்களும் பாராட்டி வருகின்றன. விளையாட்டுத்துறையில் உலக மைதானமாக தமிழ்நாடு உயர்ந்துள்ளது. இளைஞர்களின் மேம்பாடும் அரசியல் களத்தில் பேசப்படுகிறது. முதலமைச்சர் உருவாக்கிய சிறப்புத் திட்டங்களை மிகச் சிறந்த திட்டங்களாக மிகக் கவனத்துடன் கண்காணித்து வருகிறார்.

சமூகநீதிக்களமாக தமிழ்நாட்டை கட்டமைத்த பெரியார், அண்ணா வியக்கும் வகையில் மக்கள் பணி செய்து தமிழினத் தலைவராக, நாடு போற்றும் அரசியல்வாதியாக திகழ்ந்தார் கலைஞர். முத்தமிழறிஞர் கலைஞர் ஆசையின்படி பேர் சொல்லும் பிள்ளையாக நாடே திரும்பிப் பார்க்கும் வகையிலான மக்களுக்கான அரசியலை முன்னெடுத்து வருகிறார் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். கழகத் தலைவரின் நீட்சியாக அரசியலில் வெற்றி நடைபோட்டு வருகிறார் இளவல் உதயநிதி ஸ்டாலின்.

கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் என உதயநிதியின் பணிகள் அனைவரும் வியக்கும் வகையிலேயே இருந்து வருகின்றன. இதன் தொடர்ச்சியாக துணை முதலமைச்சராகவும் தமிழ்நாட்டின் வளர்ச்சியில் புது பாய்ச்சலை ஏற்படுத்துவார் உதயநிதி ஸ்டாலின்.

தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் பங்கேற்ற முதல் நிகழ்ச்சியே மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளை கௌரவிக்கிற நிகழ்ச்சி தான். இதன் மூலம் இளம் தலைவரின் அரசியல் தெளிவை தெரிந்துகொள்ள முடியும். துணை முதலமைச்சராக உதயநிதி ஸ்டாலினின் செயல்பாடுகளால், இன்னும் பல வியக்கத்தக்க மக்களுக்கான அரசியலை தமிழ்நாடு காணும் என்பது நிச்சயம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு பெரிய நெகமம் பேரூர் கழகம் சார்பாக பெரிய நெகமம் ஸ்ரீ தங்கவேல் அய்யன் கே.வீ.கே.திருமண மண்டபத்தில் மாபெரும் மருந்தில்லா (அக்கு பிரஷர்) மருத்துவ முகாம் கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வீ.கே.எஸ் சபரி கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர் சரவணகுமார் வரவேற்றார். திருமதி.ஆர்த்தி சபரி கார்த்திகேயன், ராசு (எ) முத்துக்குமார், சந்துரு (எ) சந்தானகிருஷ்ணன் , சல்மான்கான், புவனேஷ், இருகூர் உதயபூபதி, சபரிகிரிஷ்ணன், சங்கர் மகேந்திரன், ஜெயபிரகாஷ், ரஞ்சித், சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியை கே.ஈஸ்வரசாமி எம்.பி. துவக்கி வைத்தார். சிவகார்த்திகேயன் நன்றி கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

க. மூர்த்தி
அக்டோபர் 5 (2001)

மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

சட்டக் கல்லூரியில் பயிலும் போதே கழகத்தில் இணைந்து பணியாற்றியதோடு, வேலூர் மாவட்ட அவைத்தலைவராக பொறுப்பு வகித்தவர்.

சோளிங்கர் பேரூராட்சி தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.